**Judicial Form No**.53
(See Rule 42)
**DEPOSITION OF WITNESSES**
(**Chapter XXII**, **Cr**.**P**.**C**.)
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE**, **SULUR**.

Calendars
Miscellaneous
Preliminary Register
Sessions

Case No. CC 75 of 2022

Depositions of PW - 7 witness for ________ Prosecution / Defence / Court

Name : விவேகானந்தம்

Father's Name : மணியன்

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 22nd **day of September** 2025.

**(எதிரிகள் ஆஜர் இல்லை. எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜராகி பாகுபாச பிரிவு 355 ன் படி மனு தாக்கல் செய்துள்ளார். போலீசார் சாட்சிகளை நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தினார்கள்)**

**அரசு தரப்பில் முதல் விசாரணை**

நான் தற்போது பாரதிபுரத்தில் குடியிருந்து கொண்டு தனியார் கம்பெனியில் வேலை பார்த்து வருகிறேன். பார்வைமகசர் 1 மற்றும் பார்வைமகசர் 2 ஆகியவற்றில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையதுதான். புகார்தாரர் செந்தில்குமார் எங்கள் ஊரைச் சார்ந்தவர். கடந்த 07.01.2020 ஆம் தேதி மதியம் சுமார் 02:30 மணியளவில் நான் ஏ 1 ரெஸ்டாரண்டில் சாப்பிட்டுக் கொண்டிருந்த பொழுது அங்கு வந்த போலீசார் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்யப் போவதாக தெரிவித்து என் முன்னிலையிலும் என் நண்பர் இளங்கோவன் அவர்கள் முன்னிலையிலும் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வைமகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள். மேலும் அதன் பின்பு காவல் நிலையத்தில் சென்ற பொழுது பார்வைமகசரில் இரண்டில் கையொப்பம் வாங்கினார்கள். போலீசார் என்னை

விசாரித்தார்கள்.

**(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக குறுக்கு விசாரணை மேற்கொள்ள நீதிமன்ற அனுமதி கோரப்பட்டு சாட்சியை பிறழ் சாட்சியாக அறிவிக்கப்பட்டு நீதிமன்ற அனுமதியுடன் அரசு தரப்பில் குறுக்கு விசாரணை)**

பார்வை மகசர் இரண்டில் உள்ள கையொப்பம் பள்ளபாளையம் பஞ்சாயத்து அலுவலகம் அருகே எங்கள் இருவரும் முன்னிலையிலும் போலீசார் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்து மேற்படி சம்பவ இடத்திலேயே என்னிடம் கையொப்பம் வாங்கினார்கள் என்றும், மேற்படி உண்மை சம்பவத்தை மறைத்து காவல் நிலையம் சென்ற பொழுது என்னிடம் கையொப்பம் வாங்கியதாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** இல்லை

ARUNKUMAR T

Digitally signed by ARUNKUMAR T
Date: 2025.09.22 19:56:13 +0530

**Signature of Witness**

**நீதித்துறை நடுவர்**
**சூலூர்**